செ.வெ.எண்: 29/ ஜீன் / 2021 நாள்:08.07.2021

# செய்திக் குறிப்பு

**மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் மூலமாக மாதந்தோறும் ரூ.1500/- பெறும் மாற்றுத்திறனாளிகள் அனைவரும் கிராம நிர்வாக அலுவலர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடமிருந்து (GAZETTED OFFICER) தங்களது வாழ்நாள் சான்று பெற்று 31.8.2021 ற்குள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் சமர்பித்து உதவித்தொகையை தொடர்ந்து பெற்றிடலாம். மாவட்ட ஆட்சியர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

------------

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலமாக மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 40 சதவீதம் அதற்கு மேல் பாதிக்கப்பட்ட மனவளர்ச்சி குன்றியோர், தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்டோர், தொழுநோயால் பாதிக்கப்பட்டோர், முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டோர், பார்கின்சன் நோய், நாட்பட்ட நரம்பியல் குறைபாடுடையோர் மற்றும் 75 சதவீதம் அதற்கு மேல் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட பல்வகை மாற்றுத்திறனாளிகள் ஆகியோர்களுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகையாக ரூ.1500/- வழங்கப்பட்டு வருகிறது.

மேற்காணும் இத்திட்டத்தின் கீழ் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் மூலமாக மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை ரூ.1500/- பெற்று பயனடைந்து வரும் மாற்றுத்திறனாளிகள் மட்டும் இது நாள் வரை இவ்வாண்டிற்கு வாழ்நாள் சான்றினை சமர்பிக்கப்படாதவர்கள் திருச்சிராப்பள்ளி, கண்டோன்மெண்ட், மாவட்ட நீதிமன்ற வளாகம் பின்புறம் அமைந்துள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் நேரில் வந்து வாழ்நாள் சான்று படிவம் பெற்றோ அல்லது https://tiruchirappalli.nic.in/ என்ற இணையதளத்தின் வாயிலாக வாழ்நாள் சான்றினை பதிவிறக்கம் செய்து அதில் கிராம நிர்வாக அலுவலர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடமிருந்து (GAZETTED OFFICER) யாரேனும் ஒருவரிடம் கையொப்பம் பெற்று விண்ணப்பத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி தேவையான உரிய சான்றுகளுடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் 31.08.2021-ற்குள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைத்திடவும் மேலும் வட்டாட்சியர் அலுவலகத்தின் முலமாக மாதாந்திர உதவித்தொகை ரூ.1000 பெறும் மாற்றுத்திறனாளிகள் இச்சான்று சமர்பித்திட தேவையில்லை எனவும் மேலும் மேற்காணும் விவரங்களுக்கு அலுவலக தொலைபேசி எண் : 0431-2412590 -ல் தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**